දුරකථන ) 0112669192 , 0112675011
தொலைபேசி ) 0112698507 , 0112694033
Telephone ) 0112675449 , 0112675280

ෆැක්ස් ) 0112693866
பெக்ஸ் ) 0112693869
Fax ) 0112692913

විද්‍යුත් තැපෑල )postmaster@health.gov
மின்னஞ்சல் முகவரி )
e-mail )

වෙබ් අඩවිය ) www.health.gov.lk
இணையத்தளம் )
website )

සුවසිරිපාය
சுவசிரிபாய
SUWASIRIPAYA

සෞඛ්‍ය අමාත්‍යාංශය
சுகாதார அமைச்சு
Ministry of Health

මගේ අංකය )
எனது இல )CF/EXH/06/2020
My No. )

ඔබේ අංකය )
உமது இல )
Your No. : )

දිනය )
திகதி )2020/08/.19.
Date )


பொதுசுற்றுநிருப இலக்கம் : 02 - 65 / 2020

மாகாண சுகாதார செயலாளர்கள்,
பிரதிப் பணிப்பாளர் நாயகம் - இலங்கைத் தேசிய வைத்தியசாலை
மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர்கள்,
மத்திய அரசின் கீழ் நிர்வகிக்கப்படும் சகல வைத்தியசாலைகளின் பணிப்பாளர்கள்,
மற்றும் நிறுவனங்களின் தலைவர்கள் அனைவருக்கும்,
பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள்.
பன்முகப்படுத்தப்பட்ட பிரிவுகளின் தலைவர்கள்.

## உயிரியல் மருத்துவ பொறியியலாளர் சேவையினைச் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கான இரண்டாவது வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை – 2020 (இரண்டாம் தடவை)

உயிரியல் பொறியியலாளர் சேவையில் தரம் IIஐச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் மூன்று வருடங்கள் முடிவதற்கு முன்னர் சித்தியடைய வேண்டிய வினைத்திறமைகாண் தடைப்பரீட்சையானது **2020/10/11 ம்** திகதி சிங்களம், தமிழ், மற்றும் ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் நடாத்தப்படும் என்பது இத்தால் அறியத்தரப்படுகின்றது. பரீட்சை நடைபெறும் இடம், நேரம் என்பன பரீட்சை அனுமதி அட்டையில் குறிப்பிட்டு அனுப்பிவைக்கப்படும்.

**02 தகைமைகள்**

உயிரியல் பொறியியலாளர் சேவைப் பிரிவிற்கான (SL-01-2006) புதிய ஆட்சேர்ப்புத் திட்டத்திற்கு அமைய உயிரியல் பொறியியலாளர் சேவை தரம் II இற்குரிய இதுவரையில் இப் பரீட்சையினை பூரணப்படுத்தாத உத்தியோகத்தர்களும் மாத்திரம் இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்க முடியும்.

**கவனிக்கவும் :- 2020/09/17 திகதியன்று IIம் வகுப்பிற்கு நியமிக்கப்பட்டு உரிய நியமனக் கடிதம் கிடைக்கப் பெற்றுள்ள உத்தியோகத்தர்களது விண்ணப்பங்களை மாத்திரம் எனக்கு அனுப்பிவைக்க நடவடிக்கை எடுக்கவும்.**

**03 விண்ணப்பங்கள்**

இச் சுற்று நிருபத்தின் இறுதியில் காட்டப்பட்டுள்ள மாதிரிக்கு அமைவாக தயாரிக்கப்பட்டு பூரணப்படுத்தப்பட்டுள்ள விண்ணப்பதாரர்களின் விண்ணப்பங்கள் தங்களினுடைய திணைக்களத் தலைவரின் ஊடாக சுகாதார அமைச்சு பணிப்பாளர் (பரீட்சைகள்), "சுவசிரிபாய", இலக்கம்-385, வண. பத்தேகம விமலவங்ச தேரர் மாவத்தை, கொழும்பு-10 என்னும் முகவரிக்கு **2020/09/17**ம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு அனுப்பிவைத்தல் வேண்டும். விண்ணப்பப்பத்திரத்தில் கொடுக்கப்பட்டுள்ள அனைத்து தகவல்களும் சரியானவை என திணைக்களத் தலைவரினால் உறுதிப்படுத்தப்பட்டு இருக்கவேண்டும். தங்களது விண்ணப்பப்பத்திரத்துடன் விண்ணப்பதாரியின் முகவரியிடப்பட்ட ரூபா.45.00 பெறுமதியுடைய முத்திரை ஒட்டப்பட்ட கடித உறைகள் இரண்டினையும் (இதில் விண்ணப்பதாரி தனது சொந்த முகவரியினையோ, அல்லது அலுவலக முகவரியினையோ குறிப்பிடலாம்) இணைத்து அனுப்பிவைக்க வேண்டும். விண்ணப்ப முடிவுத் திகதிக்கு பின்னராக கிடைக்கும் விண்ணப்பங்கள் எதுவித அறிவித்தலும் இன்றி நிராகரிப்படும்.

**விண்ணப்பமானதுA4 தாளின் இருபக்கங்களினையும் பயன்படுத்தி தயாரிக்கப்பட வேண்டும். முதலாவது பக்கத்தில் 01 - 04 வரையான விபரங்களும், இரண்டாவது பக்கத்தில் 05 - 08 வரையான விபரங்களும் உள்ளடக்கப்பட்டிருக்க வேண்டும். மேற்படி தகவல்களுக்கு அமைய தயாரிக்கப்படாத விண்ணப்பங்கள் எவ்விதஅறிவித்தல்களும் இன்றிநிராகரிக்கப்படும்.**

## 04 பரீட்சைக் கட்டணம்

4.1 முதன் முறையாக பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் பரீட்சைக் கட்டணங்களிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளனர். ஏனைய விண்ணப்பதாரிகள் ஒவ்வொரு விடயத்திற்கும் ரூபா.25 வீதம் இரத்துச் செய்யப்படாத முத்திரையினை ஒட்டி அதன் மீது தமது கையொப்பத்தினை இட்டு இரத்துச் செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

4.2 எக் காரணத்தினைக் கொண்டும் இவ்வாறு செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணமானது வேறு பரீட்சைகளின் பொருட்டுமாற்றப்படுதலோ, அல்லது மீளப் பெறுதலோ மேற்கொள்ள இடமளிக்கப்படமாட்டாது.

## 05 பரீட்சையின் பொருட்டுஉட்படுத்திக் கொள்ளுதல்

5.1 ஏற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களின் பொருட்டு விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சை அனுமதி அட்டைகள் அனுப்பிவைக்கப்படும். அப்பரீட்சை அனுமதிப் பத்திரத்தினை உரிய முறையில் பூரணப்படுத்தி பரீட்சை குழுவின் தலைவரிடம் கையளிக்கவேண்டும். அவ்வாறு மேற் கொள்ளப்படவில்லையாயின் பரீட்சைக்கு தோற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

5.2 பரீட்சையின் பொருட்டு விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரர்கள் பரீட்சைக் குழுவின் தலைவரிடம் தங்களினது ஆள் அடையாளத்தினை உறுதிப்படுத்திக் கொள்ளுவதன் பொருட்டு கீழ் குறிப்பபிடப்பட்டுள்ள ஆவணங்களில் ஒன்றினை கொண்டுவருதல் வேண்டும்.

(அ) தேசிய அடையாள அட்டை

(ஆ) சுகாதார அமைச்சு மற்றும் அதனுடன் ஏற்புடைய நிறுவனங்களினால் முறைப்படி வழங்கப்பட்ட அடையாள அட்டை

(இ) வலுவுள்ள சாரதி அனுமதிப்பத்திரம்

(ஈ) வலுவுள்ள கடவுச் சீட்டு

## 06 பரீட்சை திட்டம்

இப் பரீட்சையானது உயிரியல் பொறியியல் சேவைக்கு உரிய விடயம் தொடர்பான அறிவை பரீட்சிப்பதன் பொருட்டு தயாரிக்கப்பட்ட 02 மணித்தியாலங்களைக் கொண்ட கட்டுரை வினாக்களையுடைய வினாப்பத்திரம் வழங்கப்படும். இது 06 வினாக்களைக் கொண்டுள்ளதுடன் அதில் 04 வினாக்களுக்கு விடையளிக்கவேண்டும். மொத்தப் புள்ளிகள் 100. சித்தியடைவதன் பொருட்டு ஆகக் குறைந்தது 40 புள்ளிகளைப் பெற்றுக் கொள்ளவேண்டும்.

## 07 பரீட்சை பாடத்திட்டம்

| வினாத்தாளின் பெயர் | பாடத்திட்டம் |
|---|---|
| விடய அறிவு | கீழே குறிப்பிடப்பட்டுள்ள வைத்திய உபகரணங்கள் தொடர்பாக பின்வரும் பகுதிகளை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டது.<br>• உபகரணம் தொடர்பான கோட்பாடுகள். (Equipment Principles)<br>• சரிசெய்யும் மற்றும் தடுப்பு பராமரிப்பு செயற்பாடு. (Corrective and Preventive Maintenances)<br>• உதிரிப்பாகங்களை அடையாளம் காணுதல். (Identification of |

Spare Parts)

- வைத்திய உபகரணங்களை அளவுத்திருத்தம் செய்தல். (Calibration of Medical equipment)
- விபரக்குறிப்புகள் உருவாக்கம். (Formation of Specifications)

இந்த வினாத்தாள் கீழே குறிப்பிடப்பட்டுள்ள வைத்திய உபகரணங்கள் தொடர்பாக பின்வரும் பகுதிகளை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டது.

வைத்திய உபகரணங்கள்:-

| | |
|---|---|
| 01. MRI Scanner | 08. Electrosurgical unit |
| 02. CT Scanner | 09. Autoclave Machine |
| 03. X – Ray Machine | 10. Centrifuge |
| 04. ECG Machine | 11. Dental unite |
| 05. Infusion Pump | 12. Suction Apparatus |
| 06. Ventilator | 13. Blood Pressure Apparatus |
| 07. Anaesthetic Machine | 14. Operating Theater Table |

**08 பரீட்சை தொடர்பான ஒழுங்கு விதிகளைக் கடைப்பிடித்தல்.**

பரீட்சார்த்திகள் குறிப்புக்களை தன்னிடத்தில் வைத்து பார்த்து எழுதுதல் தடைசெய்யப்பட்டுள்ளது. ஏனைய பரீட்சார்த்திகளின் விடைத்தாளினை பார்த்து எழுதுதலும் தடைசெய்யப்பட்டுள்ளது. ஒருவருக்கொருவர் உதவி செய்தலை தவிர்த்துக் கொள்ளல் வேண்டும். மேலும் கையடக்கத் தொலைபேசி மற்றும் அதனுடன் தொடர்புடைய தொடர்பாடல், இலத்திரணியல் உபகரணங்களை பயன்படுத்தாதிருத்தல் வேண்டும். இவ்விதிகளை மீறும் எந்தவொரு பரீட்சார்த்திமீதும் நடவடிக்கை எடுக்கப்படும்.

09 தயவுசெய்து இச் சுற்றுநிருபத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்களை உங்களது நிறுவனத்தில் கடமையாற்றும் பொருத்தமான சகல உத்தியோகத்தர்களுக்கும் அறியத்தரவும். இந்த விபரங்களை www.health.gov.lk என்னும் இணையத் தளத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

**கவனிக்கவும்:-சிங்களம், தமிழ், ஆங்கிலமொழியிலான சுற்று நிருபங்களுக்கிடையே ஏதாவது ஒவ்வாமைகள் காணப்படுமாயின் சிங்கள மொழியிலான சுற்று நிருபமே வலுவுடையதாகும்.**

எச் ஏ கமல் புஸ்பகுமார

பிரதிப் பணிப்பாளர் நாயகம் நிர்வாகம் II

செயலாளருக்காக,

சுகாதார அமைச்சு

H. A. Kamal Pushpakumara
Deputy Director General (Administration) 02
Ministry of Health and Indigenous Medical Services
"Suwasiripaya"
385, Rev. Baddegama Wimalawansa Thero Mawatha
Colombo 10.

**EXH**

| அலுவலக உபயோகத்தின் பொருட்டு |
|---|
| |

**மாதிரிவிண்ணப்பப் படிவம்**

## உயிரியல் மருத்துவ பொறியியலாளர் சேவையினைச் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கான இரண்டாவது வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை – 2020 (இரண்டாம தடவை)

**01** (அ) (i) விண்ணப்பதாரியின் முழுப் பெயர் (சிங்களத்தில் /தமிழில் எழுதவும்)

......................................................................................................................................................

(ii) விண்ணப்பதாரியின் முழுப் பெயர் (ஆங்கிலகப்பிற்றல் எழுத்துக்களில் எழுதவும்):

| | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | | | | | | | |

(iii) முதல் எழுத்துக்களுடன் பெயர் : (சிங்களத்தில்)/தமிழில்): ......................................................

......................................................................................................................................................

(iv) முதல் எழுத்துக்களுடன் பெயர் : (ஆங்கிலகப்பிற்றல் எழுத்துக்களில்)

| | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | | | | | | | |

(ஆ) (i) தரம் IIற்கு நியமிக்கப்பட்ட திகதி : ......................................................

(ii) தற்போது பெறும் வருடாந்த வேதனம் : ......................................................

(iii) கையடக்கத் தொலைபேசி இல :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|

(iv) தேசிய அடையாள அட்டை இல:

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|

**02.** (அ) தற்போது சேவைபுரியும் நிறுவனம் :

(சிங்களத்தில்) ......................................................

(தமிழில்) ......................................................

(ஆ) அதற்குரிய மாவட்டம் : ......................................................

(இ) சேவை நிலையம் நிர்வகிக்கப்படுவது

மத்திய அரசினால் ☐

மாகாண சபையினால் ☐

(ஈ) மாகாண சபையினால் ஆயின் உரிய மாகாணம் :......................................................

(உ) பரீட்சை அனுமதி அட்டை அனுப்புவதன் பொருட்டு தெளிவாக விண்ணப்பதாரியினது முகவரியிடப்பட்ட 9"x4" அளவுரூபா.45.00 பெறுமதியுடைய முத்திரை ஒட்டப்பட்ட கடித உறைகள் **இரண்டு** இணைக்கப்பட்டு உள்ளதா?

......................................................................................................................................................

(ஊ) (i) தபால் முகவரி (சிங்களத்தில்) : ......................................................

(ii) தபால் முகவரி (ஆங்கில கப்பிற்றல் எழுத்துக்களில்) : ......................................................

......................................................................................................................................................

**03** பரீட்சைக்கு தோற்றவுள்ள மொழி (சிங்களம் /தமிழ் /ஆங்கிலம்): ......................................................

**04** (அ) இதற்கு முன்னர் பரீட்சைக்குத் தோற்றியுள்ளீரா? ......................................................

(ஆ) அவ்வாறு தோற்றியிருந்தால் இம்முறை முத்திரை ஒட்டப்பட்டுள்ளதா?......................................................

| முத்திரைக்கூண்டு |
|---|
| |

**05** **விண்ணப்பதாரியின் சான்றிதழ்**

(i) எனது அறிவிற்கும், விசுவாசத்தின் அடிப்படையிலும் இவ்விண்ணப்பத்தில் என்னால் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் யாவும் உண்மையானவைகளெனவும், இப் பரீட்சைக்கு நான் தோற்றுவது முதன் முறையானபடியால் பரீட்சைக் கட்டணம் செலுத்த வேண்டிய அவசியமில்லை எனவும்/முதன் முறை அல்லாத படியால் ரூபா........................ பெறுமதியான முத்திரைகள் ஒட்டப்பட்டுள்ளதெனவும், இவ்விண்ணப்பத்தில் என்னால் ஒட்டப்பட்டுள்ள முத்திரைகள் மதிப்பழிக்கம் செய்வதற்கு முன்பு வலுவிலுள்ள பாவிக்கப்படாத முத்திரைகள் எனவும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

(ii) சுகாதாரத் திணைக்களத்தினால் பரீட்சை தொடர்பாக விதிக்கப்பட்டுள்ள சட்டதிட்டங்களுக்கு உடந்தையாக நடப்பேன் எனவும், இப்பரீட்சை தொடர்பாக நியதிச் சட்டத்தின்படி நான் தகைமையற்றவன் எனக் காணப்படின் எனது பரீட்சார்த்தித் தன்மையினை இரத்துச் செய்வதற்கு மேற்கொள்ளப்படும் எதுவிதத் தீர்மானத்திற்கும் நான் உடன்படுவேன் என்பதையும் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி.................................. ....................................................

விண்ணப்பதாரரின் கையொப்பம்

---

**06** **தனிநபர் கோவையினை கையாளும் விடய உத்தியோகத்தரின் சான்றிதழ்**

இவ் விண்ணப்பமானது விண்ணப்ப முடிவுத் திகதிக்கு முன்னர் என்னிடம் பாரமளிக்கப்பட்டது என்றும், சுயவிபரக் கோவையில் உள்ள தகவல்களின் அடிப்படையில் சரியாக பூரணப்படுத்தப்பட்டுள்ளது என்றும், இவ்விண்ணப்பப் பத்திரத்தின் பிரதி ஒன்று சுயவிபரக் கோவையில் கோவையிடப்பட்டுள்ளது என்றும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

................................................ ..............................................

பெயர் பெயரும் கையொப்பமும்,திகதியும்.

---

**07** **நிறுவனத் தலைவரின் சான்றிதழ்**

திருவாளர்/திருமதி/செல்விசெல்வன்*.....................................என்பவர் ............................................................உத்தியோகத்தராக எனது நிறுவனத்தில் பணிபுரிகிறார். என்றும் அவ் உத்தியோகத்தர் இப்பரீட்சைக்குத் தோற்றுவதுமுதன் முறை என்பதால் / முதன்முறை அல்ல*என்பதால் ரூபா............... பெறுமதியான முத்திரைகள் இவ்விண்ணப்பத்தில் ஒட்டியுள்ளதாகவும்/ முத்திரைகள் ஒட்ட அவசியமில்லை*எனவும், விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் விண்ணப்பதாரியின் சுயவிபரக் கோவையில் உள்ளவிபரங்களின் படிசரியானவைகள் எனவும் ,எனதுமுன்னிலையில் கையொப்பமிட்டுள்ளார் என்பதையும் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி..................................... .....................................................

திணைக்களத் தலைவரின் கையொப்பம்
இறப்பர் முத்திரை இடப்படவேண்டும்.

---

**08** **பன்முகப்படுத்தப்பட்ட / விசேட இயக்கத் தலைவரின் சான்றிதழ்**

திருவாளர் /திருமதி/செல்வி/செல்வன்*....................................................என்பவர் எனது நிறுவனத்தில் ...................................... உத்தியோகத்தராக சேவையாற்றுகின்றார் எனவும், விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் விண்ணப்பதாரியின் சுயவிபரக் கோவையில் உள்ளவிபரங்களின் படிசரியானவைகள் எனவும் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு உரியதகைமைகளினை இவர் பூர்த்திசெய்துள்ளார் என்றும் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி.................................. ......................................................................

பன்முகப்படுத்தப்பட்ட பகுதி/விசே டபிரிவு தலைவரின் கையொப்பம்
இறப்பர் முத்திரை இடப்படவேண்டும்.

***தேவையற்றனவற்றைகீறிடவும்**